DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I,
WALAJAPET RANIPET DISTRICT.

CC No.96/2024

LW16 Deposition of Witness for – Prosecution : PW12
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபிநாதன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| த/பெ | : | பெரியசாமி | வயது | : | 59/2026 |
| கிராமம் | : | திமிரி | | | |
| தாலுக்கா | : | ஆற்காடு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

தேதி – 09.01.2026

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை – அ.சா.12</u>**

1. நான் தற்பொழுது திமிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.07.2022ம் தேதி காலை 7.00 மணிக்கு திமிரி காவல் நிலையத்தில் பொறுப்பிலிருந்த போது சரளா க/பெ வெங்கடேசன் என்பவர் காவல் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்தார். புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாருகேற்ப திமிரி காவல் நிலைய குற்ற எண்.174/2022 இதச பிரிவுகள் 279, 337, 304(எ)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 17.07.2022ம் தேதி காலை 08.00 மணிக்கு சம்பவயிடமான காவனூரிலிருந்து கண்ணமங்கலம் செல்லும் சாலை மேட்டுகுடிசை விநாயகம் வீட்டிற்கு எதிரே சென்று சாட்சிகள் 1) விநாயகம் 2) ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைப்படம்**

**அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. இவ்வழக்கு சம்பவத்தில் இறப்புற்ற வெங்கடேசன் பிரேதத்தின் மீது அன்றைய தினமே பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை வேலூர் அரசு மருத்துவமனை சவங்கிடங்கிடம் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்பவத்தில் இறப்புற்ற வெங்கடேசன் பிரேதத்தை வேலூர் அரசு மருத்துவர் ஜீவகன் என்பவரிடம் சடல கூராய்விற்கு உட்படுத்தி இறப்புற்ற வெங்கடேசன் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறப்புற்றதாக கொடுத்த சடல கூராய்வு அறிக்கை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **வெங்கடேசனின் சடல கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் 1 முதல் 12 வரையுள்ளவர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை 25.07.2022ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கு கோப்பை திருமதி.லதா, காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

3. விபத்தில் இறப்புற்ற நபர் அவசர ஊர்தியில் உதவியாளராக பயணித்த நபர்தான் என்றால் சரிதான். அவசர ஊர்தியில் விபத்து சமயத்தில் நோயாயும், நோயாளியுடன் இருந்த நபர்களுக்கும் எவ்வித உயர் சேதமும் இல்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் இறப்புற்ற வெங்கடேசனின் மனைவி சரளா தான் புகார்தாரர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அவசர ஊர்தியில் பயணித்த நோயாளியிடம் புகார் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான், ஆனால் விசாரித்தேன். அ.சா.1 சரளா கண்ணுற்ற சாட்சி இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் அவசர ஊர்தியின் முன்னால் வேகமாக வந்த லாரியில் மோதாமல் பெரிய விபத்திலிருந்து தப்பிப்பதற்காகத்தான் அவசர ஊர்தியை ஓரம்கட்டியபோது எதிர்பாராமல் மரத்தின் மீது மோதி விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் முதற்கட்ட புலன் விசாரணையை சரிவர செய்யாமல்

புகாரினை பெற்று ஒரு தவறான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

R S PRAGANTHAA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by R S PRAGANTHAA
Location: Walajapet
Date: 2026.01.09 18:38:15 +0545

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1,
வாலாஜாபேட்டை.